AstroVed

# சத்வித்யா

மாலை: 1 மலர்: 18

எஸ்பி -75, சிட்கோ தொழில்துறை எஸ்டேட், அம்பத்தூர், சென்னை - 600058.

மாதம் இரு முறை வெளிவரும் மே 16முதல் 31வரை

ஆன்மீக விஞ்ஞான இதழ்



## வைகாசி விசாக அவதார மூர்த்தி முருகப் பெருமான்!

★ வியாபாரத்தில் வெற்றி பெற ★ நாயன்மார் வரலாறு

★ கூடு விட்டு கூடு பாய்ந்தவர்! ★ மூலிகை ரகசியம்

அனைத்து இதழ்களையும் AstroVed.com இணையதளத்தில்
இலவசமாக டவுன்லோடு செய்து பயன் பெறலாம்
மேலும் விபரங்களுக்கு போன்: 88702 88701, www.astroved.com

AstroVed

# சத்வித்யா



இன்றைக்கு மனிதர்கள் ஆன்மீகப் பாதையை அதிகம் நாடிக் கொண்டிருக்கிறார்கள். அதில் சிறு மாற்றம் வேண்டும். ஆன்மா என்பதே அறிவுள்ளது என்று அர்த்தம். அறிவார்ந்த முறையிலே ஆன்மா இயங்கும் போது ஆன்மீக வெற்றியை அடையலாம்.
குரு என்ற வார்த்தைக்கு அறியாமையைப் போக்குபவர் என்று அர்த்தம்! குருவில்லா வித்தை பாழ் என்னும் பழமொழி இதனை விளக்கும். துரோணரை மானசீகமாக குருவாய் எண்ணி வித்தை கற்ற ஏகலைவனிடம் துரோணர், கட்டை விரலை காணிக்கையாகக் கேட்டார்! அவனும் கொடுத்துவிட்டான். இது குரு விசுவாசம். இதற்கு மேலும் ஒன்று உண்டு அதாவது, குருவிற்கு பணி செய்து வித்தை கற்க வேண்டும். அல்லது குரு தானமாக வித்தையை கற்றுக் கொடுக்க வேண்டும். ஆனால், ஏகலைவன் துரோணரின் அனுமதி பெறாமலே வித்தை கற்றான். எனவே, அந்த வித்தை பயனற்றுப் போகும் விதமாக கட்டை விரலை காணிக்கையாகப் பெற்றார்.

~ Dr. Baskaran Pillai

இனிய சத்வித்யா வாசகர்களே அனைவரும் ஆரோக்கியமுடன் வாழ இறைவனை இறைஞ்சுகின்றோம்!
கடந்த ஆண்டு கொரோனா தீவிரமடைந்து நாடெங்கும் ஊரடங்கு பிறப்பிக்கப்பட்ட நிலையில் நமது சத்வித்யா தொடங்கப்பட்டது. அன்று முதல் இன்று வரை ஆதரவளித்து வரும் வாசகர்கள் அனைவருக்கும் இதயபூர்வமான நன்றி! வருமா? வராதா? எப்போதிலிருந்து? என அடுக்கடுக்கான கேள்விகளை நம்முள் எழுப்பிக் கொண்டிருந்த ஊரடங்கு வந்தே விட்டது! சுமார் இரண்டு வார காலத்துக்கு ஊரடங்கு பிறப்பிக்கப்பட்டுள்ளது! இது எதற்காக?...
நம்மை நாமே பாதுகாத்துக் கொள்வதற்காக? நம்மால் பிறர் பாதிக்கப்படாமல் இருப்பதற்காக! என்ற உண்மையை உணர்ந்து, சரியான உணவு முறை, "கபசுர குடிநீர்" போன்ற சித்தா மற்றும் ஆயுர்வேத மருத்துவ முறைகளை மேற்கொண்டால் கொரோனா இரண்டாம் அலையின் கடுமையிலிருந்து மட்டுமல்ல, நோய் தீவிரமடைந்து பெரும் பொருள் செலவிட வேண்டிய நிர்பந்தத்திலிருந்தும் காத்துக் கொள்ளலாம்.
இறைவன் அருளால் எல்லோரும் நலமுடன் வாழ வேண்டுகிறோம்.




(அச்சிட்டு வெளியிடுவோர்)
ஆஸ்ட்ரோவேட்.காம்

# சீர்காழி அருள்மிகு பிரம்மபுரீஸ்வரர் திருக்கோயில்

சிதம்பரத்தில் இருந்து 3 கிலோ மீட்டர் தொலைவில் சீர்காழி என்னும் இயற்கை எழில் சூழ்ந்த பகுதியில் பாடல் பெற்ற இத்திருத்தலம் அமைந்துள்ளது.

இறைவன் - ஸ்ரீ பிரம்ம புரீஸ்வரர் அருள்மிகு தோணியப்பர், அருள்மிகு சட்டை நாதர்.

இறைவி - ஸ்ரீ பெரியநாயகி அம்பிகை அருள்மிகு திருநிலை நாயகி.

தல விருட்சம் - பாரிஜாதம், மூங்கில்.

தலத் தீர்த்தம் - பிரம்ம தீர்த்தம் முதல் 22 தீர்த்தங்கள்.

திரு ஞான சம்பந்தர் அவதரித்த தலம் இத்திருத்தலம். திரு ஞான சம்பந்தர், திரு நாவுக்கரசர், சுந்தர மூர்த்தி சுவாமிகளால் அதிக பதிகங்கள் பெற்ற முதன்மையான தலம். குழந்தை ஞான சம்பந்தனுக்கு அன்னை பராசக்தியே ஞானப்பால் தந்து அருளிய அற்புத திருத்தலம்.

சம்பந்தரால் 66 பதிகங்களும், அப்பரால் 3 பதிகங்களும், சுந்தரரால் ஒரு பதிகமும் மொத்தம் 70 பதிகங்கள் பெற்ற தலம் ஒரே தலம் சீர்காழி திருத்தலம்.



இத்தலத்தின் வேறு பெயர்களைப் பார்ப்போம். பிரம்ம புரம், வேணு புரம், புகலி, வெங்குரு தோணிபுரம், பூந்தாராய், சிரபுரம், புறவம் சண்பை நகர், கொச்சைவயம், கழுமலம் ஸ்ரீ காளி என்பன.

வெள்ளிக்கிழமை தோறும் நடைபெறும் சுக்கிர வார வழிபாடு இத்தலத்தின் சிறப்பு அம்சம். அஷ்ட பைரவர் அபிஷேகம் பலிபீட அபிஷேகம், சட்டை நாதருக்கு செய்யப் பெறும் அர்த்த சாம வழிபாடு ஆகியவை மிகவும் சிறப்புடையவை.

"மச்சு செட்டியார்" சீர்காழி சிற்றம்பல நாடிகள் முது தாண்டவர், அருணாச்சலக் கவிராயர் ஆகியோர் வாழ்ந்த பதி நீண்ட வரலாற்று சிறப்புடைய கோயில் இத்தலம்!
சீர்காழி கோவிந்த ராஜன் என்னும் தெய்வ நலம் மிக்க புகழ்மிகு இசை பேரரசர் பிறந்து வாழ்ந்து, சிறந்ததும் இத்தலத்தின் மகிமை தான்.

"நலஞ் சிறந்தார் மனத்தகத்து மலர்கள் எட்டு" என்பார் அப்பர் பெருமான் தம் திருத்தாண்டகத்தில் கொல்லாமை, ஐம் பொறியடக்கம், பொறை அருள், அறிவு, வாய்மை, தவம், அன்பு எனும் எட்டு

அகமலர்களைக் கொண்டு இத்தல ஆன்ம லிங்கத்திற்கு பூசை செய்தாலே போதும்.
புன்னை, வெள்ளெருக்கு, சண்பகம், நந்தியாவட்டம் பாதிரி, வேளை, அலரி, செந்தாமரை என்னும் எட்டு புற மலர்கள் கொண்டும் பூஜிக்கலாம்.

திரு ஞான சம்பந்தர் சுவாமிகள் உமா மகேஸ்வரி அருளிய ஞானப் பால் உண்ட திருவருளால் திரு பிரம்மாபுரம் எனும் சீர்காழி தல பெருமையை முதலாம் திரு முறை முதல் பாடலில்-

தோடுடைய செவியன் விடை ஏறி ஓர் தூ வெண்மதி சூடி, காடுடைய சுடலைப் பொடி பூசி என் உள்ளம் கவர் கள்வன்

ஏடு உடைய மலரால் முனை நாள் பணிந்து ஏத்த அருள் செய்த பீடு உடைய பிரமாபுரம் மேவிய பெம்மான் இவன் அன்றே

என்று ஞான சம்பந்தப் பெருமான் அருளிச் செய்கிறார். உமாதேவியே ஞானப்பால் தந்தமையால் குழந்தை ஞான சம்பந்தனுக்கும் சிவனுக்கும் தந்தை மகன் உறவாகி விடுகிற உன்னத நிலை மெய்சிலிரிக்க வைக்கிறது.



இந்த அற்புத நிலை இத்தலத்தில் தான் அரங்கேறியது.
இத்தலத்தில் அவதரித்த திரு ஞான சம்பந்தரின் கோளறு பதிகம் படிப்போர் எத்தகைய துன்பமான சூழ்நிலையில் இருந்தாலும் அதிலிருந்து முற்றிலுமாக விடுபட்டு வீடு பேற்றை அடைவர்.
சம்பந்தர் அருளிய மூன்றாம் திரு முறைப் பதிகத்தில், பஞ்சாக்கரத் திருப்பதிகத்தில் சீர்காழி குறித்து பாடியுள்ளார்.

தும்மல் இருமல் தொடர்ந்த போழ்தினும் வெம்மை நரகம் விளைந்த போழ்தினும் இம்மை வினை அடர்த்து எய்தும் போழ்தினும் அம்மையினும் துணை அஞ்சு எழுத்துமே.

என்ற இப்பாடல் இக்கால சூழலையும் மாற்றும் வல்லமை உடையது.
சம்பந்தரின் நமச்சிவாயத் திருப்பதிகம் மிகவும் சிறப்பு வாய்ந்தது. திரு மூலர் தம் திருமந்திரத்தில்,
இருக்கின்ற மந்திரம் ஏழாயிரம் இருக்கின்ற மந்திரம் எத்திறம் இல்லை
இருக்கின்ற மந்திரம் சிவன் திரு மேனி இருக்கின்ற மந்திரம் இவ்வண்ணம் தானே
இப்பாடலில் சொல்லப் பெற்றுள்ள செய்தியை முழுதும் உணர்வதற்கு பரி பக்குவம் தேவை! அதை அளிப்பதோ இத்தல ஈசனின் அருட் கருணை. சீர்காழி உன் பேர் வாழி! என்று அடியார்களாகிய நாம் இத்தல ஈசனை உள்ளம் உருகி வழிபடுவோம். பதினாறு செல்வங்களைப் பெறுவோம்.

எழுதியவர்
சைவ சித்தாந்த செம்மல்
கவிஞர் சீனு செந்தாமரை
கடலூர்

# வைகாசி விசாக அவதார மூர்த்தி முருகப் பெருமான் !

தமிழ் ஆண்டின் இரண்டாவது மாதமான வைகாசிக்கு மாதவ மாதம் என்ற சிறப்புப் பெயரும் உண்டு, மலர்ச்சி என்ற பொருள் தரும் வைகாசியில் தான் பெரும்பாலான ஆலயங்களில் வசந்த விழாக்கள், பிரமோற்சவங்கள் நடத்தப்படும்.

ஆறு நட்சத்திரங்களில் கூட்டானது புனித விசாக நட்சத்திரம். ஒரு வைகாசி விசாக நட்சத்திரத்தில் தான் கந்த வேள் உதித்தார் என்கின்றன புராண நூல்கள்.



எனவே முருகனுக்கு விசாகன் என்ற திரு நாமமுண்டு. வி என்பது பட்சியான மயிலைக் குறிக்கும். சாகன் என்றால் பயணம் புரிபவர் என்று பொருள்.
எனவே முருகன் பட்சியாகிய (மயில்) மீது அமர்ந்து வலம் வருவதால் விசாகன் காரணப் பெயரும் ஆகிறது.
அக்காலத்தில் வாழ்ந்த சூரபத்மன் எனும் அசுரன் வானுலகத் தேவர்கள், மகரிஷிகள், சான்றோர்கள் என அத்தனை பேர்களையும் தேவையின்றி துன்புறுத்திக் கொண்டிருந்தான்.
அந்த அசுரனிடமிருந்து தங்களை காக்க வேண்டும் என தேவர்கள் ஒன்று கூடி, சிவ பிரானிடம் கண் கலங்க வேண்டினர்.
அப்போது சிவன் அதனை ஏற்கும் வகையில் தனது மூன்றாவது கண்ணான நெற்றிக் கண்ணைத் திறந்தார். அச்சமயம் அதிலிருந்து நளிர்ந்து பாய்ந்த ஆறு தீப்பொறிகளும் சரவணப் பொய்கையில் பாய்ந்து அவை ஒவ்வொன்றும் தனித்தனி ஆறு குழந்தைகளாக மாறி விட்டன.
அந்த ஆறு குழந்தைகளையும் ஆறு கார்த்திகைப் பெண்கள் எடுத்து வளர்த்தனர்.
இந்த விபரம் அறிந்த அன்னை பார்வதி தேவி மிக்க பாசமுடன் அக்குழந்தைகளைக் கண்டு ஆனந்தித்து அணைத்தாள். அக்கணமே, அந்த ஆறு சேய்களும் ஒரு சேர்ந்து ஆறு முகங்களும் பனிரெண்டு கரங்களும் கொண்ட ஒரே குழந்தையாக மாறி காட்சி தந்தது.
ஆரம்பத்தில் ஆறு பெண்களால், அதுவும் கார்திகைப் பெண்களால் வளர்க்கப் பட்டதால் கார்த்திகேயன் எனவும் முருகவேள் அழைக்கப்படுவார்.
ஆறு முகங்கொண்டதால் ஆறுமுகன் என போற்றப்படும் இச்சிவகுமாரனுக்கு குமரன் என்ற

திருநாமமும் உண்டு. ஆன்மாக்களின் அறியாமையைப் போக்கும் முருகன் குமர குருபரனுமாகவும் திகழ்கிறார்.

தன்னைப் பற்றும் பக்தர்களுக்கு பற்றுக் கோடாக இருப்பதால். இந்த கந்தன் எதனால் சுப்பிரமணியன் எனவும் வர்ணிக்கப்படுகிறார் தெரியுமா?

முதலெழுத்தான சு மேலான பிரம்மத்தைச் சுட்ட, பிரம்மம் என்பது பெரிய பொருளிலிருந்து என அர்த்தமாக நியம் என்பது தோன்றி ஒளிர்வது என்ற பொருளைத் தரும்.

சிவம், சிவன் என்ற மேலான பெரிய பிரம்மத்திலிருந்து தோன்றி முருகன் ஒளிர்வதால் சுப்பிரமணியனாக திகழ்கிறார்!

இப்படி முருகன் கொண்ட பல திரு நாமங்களுக்கு ஆன்றோர்கள் பலர் விளக்கமளித்துள்ளனர். இவை தவிர வேறு பல திருநாமங்களையும் பெற்றுள்ளார் இந்த சரவணபவன்!

இத்தனை சிறப்புக்கள் படைத்த சோமாஸ் கந்தன் உதித்த வைகாசி விசாக புண்ணிய தினத்தன்று சிவ பக்தர்கள் புனித நீராடி, அவரவர் வழக்கப் படி முருக பிரானை வீட்டில் பூஜிப்பார்கள்.

அப்பொழுது இந்த இறைவனுக்கு பழங்கள், நீர் மோர், பானகம், தயிர் சாதம், அப்பம், சர்க்கரைப் பொங்கல் இவற்றை நைவேதனம் செய்யும் வழக்கமுள்ளது.

முருகனை பூஜிக்கையில் செவ்வரளி, நாகலிங்கப் பூ, செந்தாமரை மல்லிகை போன்ற மலர்களை பயன்படுத்துதல் விசேடமானது.

வைகாசி விசாக நாளில் ஆலயம் சென்று பிரார்த்தனை மேற் கொண்டவர்கள், பால் குடம், பாற் காவடி சுமக்கும் மரபு நீண்ட காலமாகத் தொடர்கிறது.

அசுரன் சூரபத்மனை வெற்றி கொண்ட முருகவேளுக்கு அனைத்து சிவாலயங்களிலும் புனித வைகாசி விசாக நாளன்று சிறப்பு வழிபாடுகள், தேரோட்டம் போன்ற கொண்டாட்டங்கள் நடத்தப்படுகின்றன.

வைகாசி விசாக நன்னாளில் விரதமிருப்போர் வேண்டியவாறு மயில் வாகனான குகன் அவரவர் வேண்டுதல்களின் படி திருமணப் பேறு, மக்கட் பேறு, ஞானப் பேறு, பதவி உயர்வு, மற்றும் சகல நற்பலன்களையும் பெறுவார்கள் என்று முருகப் பக்தர்களின் அனுபவ உண்மைகளாகும்.

எனவே நிகழும் வைகாசி விசாகப் பொன்னாளான செவ்வாய் அன்று தக்க முறையில் வேலவனைப் பூஜித்து அனைத்து நன்மைகளையும் பெறும் பாக்கியசாலி ஆவோம்

ஓம் சரவணபவ!

~ கீதாமணி




KABA SURA KUDINEER

15 herbs effective against Viral infections, fever, cough and breathing difficulties

Call: 88702 88701

# சிவ மகா தத்துவம் உணர்த்தும் சைவப் பெருநெறி

உலகெல்லாம் உணர்ந்து ஓதற்கு அரியவன் சர்வேஸ்வரன் ஜோதி மயமாகவும் அருட்காட்சி அளிப்பவன் தென்னாடுடைய சிவனாக மட்டுமல்லாது எந்நாட்டவருக்கும் இறைவனாக அருள் பாலிக்க கூடியவன் சிவபெருமான்.

**சிவாய நம என்று சிந்தித்து இருப்போர்க்கு அபாயம் ஒரு நாளும் இல்லை; உபாயம் இதுவே மதியாகும் அல்லாத எல்லாம் விதியே மதியாய் விடும்.**

என்பது ஔவையின் அமுத மொழியாகும்.



சைவம் ஓர் பெருநெறி! சிவத்துடன் தொடர்புடையது. சிவானந்தம் தருவது.

சிவ பெருமானை தந்தையாக மட்டுமின்றி தாயாகவும் வழிபடும் இனிய நெறியே சைவ சமயப் பெருநெறி!

**அங்கமெல்லாம் குறைந்து அழுகு தொழு**
**நோயராய் ஆவுரித்துத் தின்று உழலும்**
**புலையரேனும்**
**கங்கை வார் சடைக் கரந்தார்க்கு**
**அன்பராகில்**
**அவர் கண்டீர் நாம் வணங்கும் கடவுளாரே**

என்பது அப்பர் பெருமான் அருள் வாக்காகும். ஆகமம்- ஆ என்பது ஆன்மா! கமம் என்பது பாசங்களை போக்கி முக்தி தருவது. சிவாகமங்கள் இருபத்தி எட்டு ஆகும்!

1.காமிகம் 2. யோகஜம் 3. சிந்தியம் 4. காரணம் 5. அஜீதம் 6. தீப்தம் 7. சூட்சமம் 8. ஸஹஸ்ரம் 9. அம்சுமான் 10. சுப்ரபேதம் 11. விஜயம் 12. நிச் வாசம் 13. சுவாயம் புவம் 14. அனிலம் 15. வீரம் 16. ரௌரவம் 17. மகுடம் 18. விமலம் 19. சந்திரஞானம் 20. முக பிம்பம் 21. ப்ரோத் கீதம் 22. லலிதம் 23. ஸித்தம் 24. சந்தானம் 25. சர் வோக்தம் 26. பாரமேஸ்வரம் 27.கிரணம் 28.வாதுளம்.

இந்த 28 சிவா கமகளும் ஈசனின் ஐந்து முகங்களில் இருந்தும் தோன்றியதாக ஐதீகம்

திருக்கோயில் வழிபாடு சைவப் பெருநெறியின் முக்கிய தெய்வீக மகானுபவமாகும்.

ஆன்றோர்கள் ஞானிகள் தங்களின் ஆன்ம பலத்தை அதிகரிக்க ஆலயங்களை நாடினார் ஆலயம் என்பதும் ஆ என்பது ஆன்மா லயம் என்பது லயிப்பது.

ஆன்மாக்கள் லயிக்கக்கூடிய இடமே ஆலயமாகும். ஆலயம் தொழுவது சாலவும் நன்று என்பதும் அருளாளர்களது அனுபவ மொழியாகும்.

வாழ்க்கை உயர உயரிய குறிக்கோளையும் அதனை அடையும் வழிகாட்டுவதும் திருக்கோயில் தரிசனம் மட்டுமே.

கோபுர தரிசனம் கோடி புண்ணியம் என்பதும் ஆன்றோர்தம் அமுத மொழியாகும்.

புராணங்களும், திரு முறை பதிகங்களும் இறை நிலையை உணர உதவும் பொக்கிஷங்கள்.

பன்னிரு திரு முறை வரலாறு சைவப் பயிர் செழித்து வளர்ந்தமையை உணர்த்துவது.

திரு முறை ஆசிரியர்களின் திருத் தொண்டும் ஈசனை மகிழ்வித்தது!

மாமன்னர்கள் கண்டராதித்தன், முதற் பராந்தகன் கல்வெட்டுகளில் பன்னிரெண்டு திரு முறைகள் குறித்த செய்திகளை அறியலாம்.

தில்லை கோயில் எல்லையே இல்லாத பெருஞ்சிறப்புகள் கொண்டது.

ராஜ சபை, தேவ சபை- நிருத்த சபை- கனக சபை சிற் சபை என ஐந்து சபைகள் கொண்டது நடராஜ பெருமான் கோயில்.

ஆனந்த களிப்புடன் நடம் புரியும் ஸ்ரீ சிவகாம சுந்தரி சமேத ஸ்ரீ நடராஜ பெருமான் திருநடம் புரிகின்ற அழகோ அழகு!

சிதம்பர ரகசியமும் சொல்லப் பெற்றுள்ளது.

சீவனை சிவனோடு ஐக்கியப் படுத்தி சிவ முக்தர்கள் அனுபவித்த பேரின்ப பெரு நிலையே சிதம்பர ரகசியம்.

ஆடல் வல்லானின் ஆனந்த தாண்டவமே ஆருத்ரா தரிசனம் இதை சிதம்பரம் கோயிலில் தான் தரிசிக்க முடியும் என்பது இல்லை.

நம் மனமே பொற் சபையாக மாற்றினாலே போதும். ஆருத்ரா தரிசனத்தை ஆன்மா உணர்ந்து மகிழும்.

மானுடர் ஆக்கை வடிவு சிவலிங்கம்
மானுடர் ஆக்கை வடிவு சிதம்பரம்
மானுடர் ஆக்கை வடிவு சதாசிவம்
மானுடர் ஆக்கை வடிவு திருக்கூத்தே

என்பது திரு மூலர் உணர்ந்து உணர்த்திய திரு மந்திரமாகும்.

ஆயிரங்கால் மண்டபமே சகஸ்ரம் இருபத்தோரு படிக்கட்டுகள் உள்ள வாயிலுக்கு முகப்பில் உள்ள மண்டபமே ஆக்ஞா என்று சொல்லக்கூடிய புருவ மத்திமம்.

பஞ்ச மூர்த்திகள் எல்லாம் வந்து ஒரு முகமாக நிற்பது என்பது அலைந்து திரிந்திடும் ஐம்புலன்களின் ஒடுக்கம் ஆகவே ஒன்று பரம் பொருளான சர்வேஸ்வரனை ஒன்றி இருப்பதே உயர்வானதாகும்.

வேத நெறி தழைத்தோங்க சிவனருளால் திருத்தொண்டு புரிந்திடுவோம்!

தூய வெண்ணீறு தரித்து மனம் மொழி மெய் ஒன்று பட வழிபடுவோம்

காதலாகி கசிந்து கண்ணீர் மல்கி
ஓதுவார் தமை நன்னெறிக்கு உய்ப்பது
வேதம் நான்கினும் மெய்ப் பொருளாவது
நாதன் நாமம் நமச்சிவாயவே

என்று மொழிந்திடுவோம்.

தொல்லை இரும் பிறவி சூழும் தளை நீக்கி
அல்லல் அறுத்து ஆனந்தம் ஆக்கியதே, எல்லை
மருவா நெறி அளிக்கும் வாதவூர் எம் கோன்
திருவாசகம் என்னும் தேன்

என்பதை மனதார உணர்ந்து உலகோர்க்கு ஈசன் அருளால் உணர்த்துவோம்.

சிந்தை மகிழ சிவாய நம என சிந்திப்போம் சிவனருள் பெறுவோம்.

எழுதியவர்
சைவ சித்தாந்த செம்மல்
கவிஞர் சீனு செந்தாமரை
கடலூர்

# வியாபாரத்தில் வெற்றி பெற

அன்னையின் அழகைக் குறிக்கின்ற ஒவ்வொரு சொல்லும் வேதமந்திரங்களுக்கு நிகரானது! அந்த வகையில் சௌந்தர்ய லஹரியின் 32 வது பாடல் "வியாபாரத்தில் வெற்றி பெற". அனைத்து ஆற்றல்களையும் கொடுக்கக்கூடிய தன்மை வாய்ந்ததாய்க் கருதப்படுகின்றது.
அந்த மந்திரச் சொற்கள் நிறைந்த பாடலை இப்போது பார்ப்போம்.

**மந்திரப்பாடல்:**

"சிவ! சக்தி: காம் ஷித- ரத ரவி: சீதகிரண:
ஸ்மரோ ஹம்ஸ: சக்ரஸ் ததனு சபரா- மார- ஹரய!
அமீ ஹ்ருல்லேகாபிஸ்- திஸ்ருபி- ரவஸானேஷீகடிதா
பஜந்தே- வர்ணாஸ்தே தவ ஜனனி நாமா வயவதாம்."

**பாடலின் பொருள்:**

பஞ்சதசாக்ஷரி மந்திரத்தின் வடிவமாக வீற்றிருந்து அருள் புரியும் அன்னையே நீ தான் செல்வம்! செல்வத்தால் வரும் சுகம்! இப்படி சிவன், விஷ்ணு, இந்திரன், சந்திரன், சூரியன் என அனைத்து சக்திகளையும் உள்ளடக்கிய உன் எழில் கண்டால், வெற்றி வந்து சேர்வதை யாரால் தடுக்க முடியும்? வெற்றியின் வடிவமே நீ தானே?
மேற்கண்ட பொருள் பொதிந்த இந்த மந்திரப் பாடலை ஜெபிப்பதன் மூலம் தொழிலில் வெற்றி மேல் வெற்றி பெற முடியும்.
இதனைப் பிரயோகிக்கும் முறையினை பார்ப்போம்.
இந்த மந்திரத்திற்கான யந்திரத்தை தங்கம் அல்லது தாமிரத் தகட்டில் வரைந்து, பூஜைக்குப் பயன்படுத்த வேண்டும்.
45 நாட்கள் தினமும் 1000 முறை வீதம் வடக்கு நோக்கி அமர்ந்து மந்திரத்தை ஜபிக்க வேண்டும்.
குங்குமத்தினால் லலிதா த்ரிசதி அர்ச்சனை செய்தல் நலம்!
உளுந்து வடை, தயிர்சாதம் இவற்றுடன் பழங்களை நைவேத்யம் செய்யவும்.
இதனைத் தொடர்ந்து செய்வதனால் செய்கின்ற வியாபாரத்தில் அமோக வெற்றி, அனைவரையும் வசீகரிக்கும் சக்தி, ரசவாதம் செய்யும் திறமை ஆகியவை சித்தியாகும்.

~ ரா. பன்னீர்செல்வம்

# ஸ்ரீ விநாயகரும் ஔவையாரும்!

புலவர் ஔவையார் பிள்ளையாரின் அதீத பக்தை என்பது அனைவரும் அறிந்த செய்தி.

சிவயோக சாரம் என்று மக்கள் போற்றும் தலை சிறந்த தத்துவ நூலான விநாயகர் அகவல் நூல் ஔவையார் படைத்தருளிய பல அற்புத நூல்களில் ஒன்றாகும். மிக மிகச் சுருக்கமாக இந்நூலில் கணபதியார் தன் பக்தர்களுக்கு, அருளும் திறங்கள், குண்டலி சக்தியின் பெருமை இவை அழகாக உரைக்கப்பட்டுள்ளன. தன்னை ஆட் கொள்ளும் அருள் உள்ளத்தோடு ஒரு அன்னையைப் போன்று, தன் பிறவி மயக்கம் அறுத்து விடும் நோக்கமுடன் முதல் ஐந்தெழுத்து புண்ணிய மந்திரமான ஐந்தெழுத்து கொண்ட பஞ்சாட்சரத்தை ஸ்ரீ விநாயகர் தனக்கு உபதேசித்ததாக மெய் சிலிர்க்கிறார். ஔவையார்.



அதில் சிவகுமாரனை, "சண்முக ஸ்தூலமும் சதுர்முக சூட்ஷமமும் எண் முகமாக இனிதெனக்கு அருளி" எனக் கூறி பரவசப்படுவார்

ஔவையார் அதில் குறிப்பிடும் சண்முக ஸ்தூலமென்பது ஆறு எழுத்துக்களைக் கொண்ட ஸ்தூல பஞ்சாட்சரம் என திரு முருக கிருபானந்த வாரியார் விளக்கம் தந்துள்ளார்கள்.

சதுர் முக சண்முகம் என்பதில் வரும் முகமென்பது பொருட்களின் குறியீடாக நிற்கும் எழுத்துக்களை சுட்டும்.

ஒருவரை இன்னாரென வித்தியாசப்படுத்திக் காட்டுவதான அது சிவம், அருள், உயிர், மாயை, கன்மம் ஆகிய ஐம் பொருட்களையும் எடுத்துக்கூறும் வதனமாக இருக்கவே, பஞ்சாட்சரம் சதுர்முக ஷண்முகம் என ஔவையாரால் அருளப்பட்டுள்ளது இந்த விநாயகர் அகவலில்.

எண் முகமென இங்கே ஔவையார் வர்ணித்துள்ளது தியானித்தல் நிலையை ஆகும்.

ஔவையாரின் விநாயகர் அகவலை ஒரு முகமாய் பாராயணம் புரிவோர்க்கு ஔவையாருக்கு கிட்டிய சதா சிவலிங்க தரிசனம் ஒரு பிறவிப் பயனாக நிச்சயம் கிடைக்கும் என்பதில் எவ்வித ஐயமுமில்லை!

என் முகவரி: ஆரூர். ஆர் சுப்பிரமணியன் துணை கலெக்டர் ஓய்வு ஸ்ரீ நிகேதன், கதவு எண், முதல் தெரு, பிரசாந்தி நகர், காரைக்கால் சாலை, பழவந்தான் கட்டளை, கும்பகோணம். Pincode 612401.

~ ஆரூர். ஆர். சுப்பிரமணியன்
துணை கலெக்டர் (ஓய்வு)

# தொழிலில் வெற்றியை கொடுக்கும் சஸ்திர பந்த வேல் எந்திரம்

முருகனின் அடியவர்கள் துன்பத்திலிருக்கும் போது மனம் உருகி முருகப் பெருமானை வேண்டி வழிபடும் பொழுது முருகன் அடியார்களின் துயர் துடைக்க முருகன் வருவதற்கு முன் ஓடிவந்து காப்பது முருகப் பெருமானின் வேல் என்பது முருகனடியார்களின் நம்பிக்கை. எனவேதான் அருணகிரிநாதர் முருகப் பெருமானை பாடியது மட்டும் அல்லாமல் முருகப் பெருமானின் வேல் பற்றியும் புகழ்ந்து பாடியுள்ளார்.

தமிழ்க்கடவுளான முருகப்பெருமானின் அதிதீவிர பக்தரான ஸ்ரீ மத் குமரகுரு தாச சுவாமிகளும் முருகனின் வேலை துதித்து போற்றி பாடியிருக்கும் பாடல் தான் சஸ்திர பந்தம். நாம் அனைவரும் இந்த சஸ்திர பந்தத்தைப் பாராயணம் செய்தால் அது நம்மை காக்கும் கவசமாக இருந்து நன்மை அளிக்கும். நம்மை சுற்றியுள்ள எதிர்மறை ஆற்றல்களை அழித்து நேர்மறை ஆற்றல்களை உருவாக்கும். அதுமட்டும் அல்லாமல் செய்யும் தொழிலில் வெற்றி, கண் திருஷ்டி எதிரிகளிடமிருந்து பாதுகாப்பு மற்றும் அனைத்து விதமான வளங்களையும் இந்த சஸ்திர பந்தமானது கொடுக்கவல்லது. இந்த சஸ்திர பந்தமானது சித்திரகவி எனும் பாடல் வகையை சார்ந்தது. சித்திரகவி என்பது எழுத்துக்களை கொண்டு வரையப்படும் சித்திரம் ஆகும். முருகப்பெருமானின் வேலாயுதத்தை போல் வரைந்து அந்த வரையப்பட்ட வேல் ஆயுதத்தில் எழுத்துக்களை பொறித்து வரையப்பட்ட சஸ்திர பந்த எந்திரமாகும். இந்த எந்திரத்தை பூஜை அறையில் வைத்து, செவ்வரளி பூவை கொண்டு பூஜித்து தீப தூப ஆராதனை காட்டி, பாம்பன் ஸ்வாமிகளை வணங்கி கீழே கொடுக்கப்பட்டிருக்கும் பாடலை 27 முறை பாராயணம் செய்து தினமும் வழிபட்டால் மேலே குறிப்பிட்டுள்ள பலன்களை எளிதில் பெறலாம்.

சஸ்திர பந்தம்
வாலவே தாந்தபா வாசம்போ காத்தன்பா
மாலைபூ ணேமதிற மால்வலர்தே ___ சாலவ
மாபாசம் போக மதிதேசார் மாபூதம்
வாபாதந் தாவேல வா.




இந்த வழிபாட்டு முறையை முதலில் முருகனின் பிறந்த நாளாம் வைகாசி மாதம் 11 ஆம் நாள் (மே 25, 2021), செவ்வாய் கிழமை, விசாக நட்சத்திரம் கூடிய சுபயோக சுபதினத்தில் வெவ்வாய் ஹோரையில் ஆரம்பித்து தொடந்து தினமும் வணங்கி வர தொழிலில் வெற்றி, செல்வ செழிப்பு, நோய்களிலிருந்து விடுதலை, கண் திருஸ்டி பாதிப்பிலிருந்து விடுதலை, எதிரிகளிடமிருந்து பாதுகாப்பு மற்றும் சகல வளங்களையும் கிடைக்க பெறலாம்.

~ ஆஸ்ட்ரோவேட் ஜோதிடர் மு. செந்தில் நாதன்

# நாயன்மார் வரலாறு
# சண்டிகேஸ்வரர்

அன்பு சத்வித்யா வாசகர்களே! இந்த இதழிலிருந்து நாம் நாயன்மார்கள் மற்றும் ஆழ்வார்கள் வரலாற்றினை ஒவ்வொன்றாக பார்க்கவிருக்கிறோம்.

சாதாரண மனிதர்களாக மானுடப் பிறவி எடுத்த பலர், "இன்று இறைவன் அரசாட்சி செய்யும் ஆலயங்களை" அலங்கரித்துக் கொண்டிருக்கிறார்கள்! ஆம்'.




சைவ நெறியில் நாயன்மார்கள் எனவும் வைணவ முறையில் ஆழ்வார்கள் எனவும் அழைக்கப்பட்டு, வணங்கத்தக்க, வகையில் தெய்வங்களோடு தெய்வங்களாக ஆலயங்களில் சன்னதி கொண்டுள்ளார்கள்.

இப்போது நாம் சிவத் தொண்டில் சிறந்து விளங்கி, சுற்றம், நட்பு, உறவுகளை விட சுகம் தருவது ஈசன் மீது கொண்ட பாசமே என பரமனின் பெருங்கருணை ஒன்றே பிறவிப் பெருங்கடலை நீந்தி கரைசேர உதவும் என்றெண்ணி, சிவத்தொண்டு ஒன்றையே வாழ்வின் கடமையாக எண்ணி இறை பக்தியில் தங்களை கரைத்துக் கொண்டோர், இறைத்தன்மை எய்தினர்!
அவர்களில் செயற்கரிய சிவபக்தியினால் சிறந்து விளங்கியோர் 63 நாயன்மார்களாக இன்றளவும் சிவாலயங்களில் சிறப்பு பெற்று விளங்குகின்றனர்.

இந்த நாயன்மார்கள், தொகையடியார்கள், இன்னும் பல சிவனடியார்களின் வரலாற்றினை, தொடர்ந்து உங்களுக்குத் தருகிறோம்.
முதன் முதலில், சண்டிகேஸ்வரரைப் பற்றி பார்ப்போம்!

சிவ பெருமானின் கருவறைக்கு வெளியே சிவன் இருக்கும் திசையைப் பார்த்தபடி, உட்புறம் சென்று வணங்கத்தக்க வகையில் சன்னதி கொண்டு இருப்பவர் தான் சண்டிகேஸ்வரர்!
இவரை செவிட்டு சாமி எனக்கூறி இவர் அருகிலே சென்று கைதட்டுவோர் ஏராளம்! இது தவறு!
சதா சர்வ காலமும் சிவ சிந்தனையோடு தியானத்தில் இருக்கும் சண்டிகேஸ்வரரை இந்த கைதட்டும் செயலால் தொல்லை செய்யலாமரி அவரிடம் சென்று, "இந்த ஆலயத்திலிருந்து நான் எதையும் கவர்ந்து செல்லவில்லை இறையருள் மட்டுமே என்னோடு உள்ளது என்று கைகளை விரித்துக் காட்டுவதே

சரியான வழிபாடு!
மனித குலத்தில், சாதாரண பிறப்புற்ற இவருக்கு இந்த இறைசக்தி வந்தது எப்படி? இவருடைய சிவபக்தி அத்தனை சிறப்பானதா?
ஒரு சாதாரண மனிதன், இறைவனால் ஆட்கொள்ளப்பட்டு இந்த நிலைக்கு உயர்ந்தது எப்படி? என்பதைத் தெரிந்து கொள்ள"
சண்டிகேஸ்வரரின் வரலாறு என்ன என்பதனை பார்ப்போம்.
கும்பகோணத்திலிருந்து திருப்பனந்தாள் செல்லும் வழியில் இருக்கும் சிறிய ஊர்தான், திருச்செய்ஞலூர்!
இந்த ஊரில், சாதாரண குடும்பத்தில் அவதரித்தவர் தான் விசார சர்மர் என்பவர்! ஈசன் மீது அளவற்ற பாசம் கொண்டவர்! வயிற்றுப் பிழைப்புக்காக, பெரிய செல்வந்தர்கள் பலரது பசுமாடுகளை மேய்கின்ற பணியைச் செய்து வந்தார்.




பசுக்களின் மீது இவர் கொண்ட ஈடுபாடும் இறையருளும் ஒன்று சேர, இவர் மேய்க்கும் பசுக்கள் அனைத்தும் அளவுக்கதிகமான பால் கொடுத்தன. அளவுக்கு மீறி கறக்கும் பாலை என்ன செய்யலாம் என்று விசாரசர்மர் யோசிக்கத் தொடங்கினார். அப்போது தான் இவரது முற்பிறவி வினை, தன் விளையாட்டை ஆரம்பித்தது இந்த பசுக்கள் கொடுக்கின்ற பாலை சிவனுக்கு அபிஷேகம் செய்தால் என்ன? இப்படி நினைக்கும் போதே சிவலிங்க அபிஷேகக் காட்சி இவரது மனக்கண்ணில் தோன்றியது!
ஒரு சிவபக்தருக்கு இதைவிட வேறென்ன மகிழ்ச்சி வேண்டும்? பசும்பாலால் அபிஷேகம் செய்வது என்று முடிவு செய்து விட்டார். சிவலிங்கத்திற்கு எங்கே போவது? அதற்கும் உடனே ஒரு யோசனை தோன்றியது!
மணியாற்றங்கரையில் உள்ள மண்ணை எடுத்தார்! இறைவனை மனதில் நினைத்த படி, அந்த மண்ணில் ஒரு சிவலிங்கமும் செய்தார்! அடடா! இறைவன் எத்தனை அழகு? என்று பூரிப்படைந்தார்! கண நேரமும் தாமதிக்காமல் பசுக்களிலிருந்து பாலைக் கறந்தார்; தன் மனம் நிறைய, கண் குளிர சிவலிங்கத்திற்கு அபிஷேகம் செய்து, ஆனந்தத்தில் திளைத்தார்!
இந்த ஆனந்தம் ஒரு நாள் இரு நாள் அல்ல; தொடர்ந்து கொண்டே இருந்தது!
பசுக்களின் உரிமையாளர்களுக்கு பால் கிடைக்கவில்லை!
மிகுந்த கோபம் கொண்ட பசுவின் உரிமையாளர்கள் விசார சர்மரின் தந்தையான எச்சதத்தரை அழைத்தனர்!
"நாள் முழுவதும் மேய்ந்து விட்டு வரும் பசுக்கள், மடிவற்றி வருகின்றன. பாலே கொடுப்பதில்லை! உன்

மகன் எங்களை ஏமாற்றுகிறான்.
உண்மை என்னவென்று கண்டு வந்து சொல்! தண்டனையை நாங்கள் தருகிறோம்," என்று கடுங்கோபத்துடன் சொல்லி விட்டனர்!
தன் மகன் எந்த தவறும் செய்யமாட்டானே; எதனால் இப்படி நடக்கிறது? என்று மனம் குழம்பிய எச்சதத்தர் மறுநாள், தன் மகன் விசாரசர்மர் பசுக்களை ஓட்டிச் சென்ற பிறகு, பின் தொடர்ந்து போய் மறைந்திருந்து கவனித்தார். சரியான தருணத்தில், விசாரசர்மர் பசுக்களில் பாலைக் கறந்தார்! தன் சிந்தை குளிர, சிவலிங்கத்திற்கு அபிஷேகம் செய்ய ஆரம்பித்தார்! மறைந்து நின்றிருந்து இதனைக் கவனித்த தந்தையாருக்கு கோபம் தாளவில்லை.
மறைவிலிருந்து வெளிப்பட்டவர், ஆத்திரத்துடன் கலயங்களில் இருந்த பாலை எட்டி உதைத்து தள்ளினார்!
இதை சற்றும் எதிர் பாராத விசாரசர்மர்,
"என் இறைவனுக்கு அபிஷேகம் செய்ய நான் வைத்திருந்த பாலை காலால் உதைத்த கயவனே? உன் கால்களை வெட்டி வீழ்த்துவேன்," என வெறி கொண்டு கர்ஜித்தவர், கண் இமைக்கும் நேரத்தில் தந்தையின் கால்களை வெட்டி வீழ்த்தினார்! ஆம்'.
அவர் தன் தந்தை என்பதை விட, சிவ நிந்தனை செய்தவர் என்ற சிந்தனை ஒன்றே மேலோங்கி நின்றது விசாரசர்மருக்கு.
சில நொடிகள் கழிந்த பின்பு தான் கால்களை இழந்தவர் தன் தந்தை என்கிற நினைவே வந்தது! ஆனாலும் தன் செயல் சரி என்றே நினைத்தார்!
இந்த நேரத்தில் இறைவன், தம்பதி சமேதராய் தோன்றி விசார சர்மருக்கு தரிசனம் கொடுத்தார். வணங்கி நின்ற அவரிடம் இறைவன், ஈஸ்வரனுக்காக தந்தையிடமே சண்டை போட்ட நீ சண்டேஸ்வரன் என்று அருளி, இனி உமக்கு அம்மையும் நானே அப்பனும் நானே் என்று கூறி, தன்னுடன் ஐக்கியப்படுத்திக் கொண்டார்!
தந்தை என்னும் உறவை விட, தலைவனான ஈசன் மீது கொண்ட பக்தி என்னும் உறவே இங்கே மேலோங்கி நின்றது.

இவர்தான் சண்டிகேஸ்வரர் என்னும் பெயரில் தனி சன்னதி கொண்டு, நாயன்மார்களில் ஒருவராக தெய்வங்களில் ஒருவராக உயர் நிலை அடைந்தார்! அடுத்த இதழில் வேறொரு அடியாரான நாயன்மாரின் வரலாற்றினை அறிவோம்!

~ ரா. பன்னீர்செல்வம்



# கூடு விட்டு கூடு பாய்ந்தவர் !

அவர் ஒரு பெரிய சித்தர், கொண்ட பெயர் திருமூலரென்பது. அன்று அவர் வழக்கம் போல் வான் வழியாக பயணித்துக் கொண்டிருந்தார். அவர் வழியில் கீழே பாண்டியநாடு குறுக்கிட்டது. அப்போது அவரது செவிகளில் யாரோ புலம்பி அழும் சப்தம் தாக்கியது. அது என்னவென தான் கொண்ட சக்தியால், அதன் காரணத்தை அவரால் அறிய முடிந்தது.

பாண்டிய நாட்டு மன்னனான வீர சேனன் அன்று இரவு நேரத்தில் வழக்கம் போல் மாறுவேடம் பூண்டு நகர் உலா வந்து கொண்டிருந்தவன், திடீரென பார்வை மங்கிப்போய் நடுங்கும் உடலுடன் அரண்மனைக்குத் திரும்பி விட்டான். அவனது நிலையைக் கண்டு பதறிய அவன் மனைவி பட்டத்தரசி குணவதி "ஏன் என்னவாச்சு?" என அரசனை வினவ அவன் பதில் ஏதும் கூற இயலாத நிலையில் சுருண்டு போய் மஞ்சத்தில் விழுந்து விட்டான். இதற்குள் விஷயம் தெரிந்து அரண்மனை வைத்தியர்கள் அனைவரும் ஒன்று கூடி மன்னனுக்கு அவசர சிகிச்சைகள் தர ஆரம்பித்தனர். ஆனால் சிகிச்சை பலனின்றி அரசன் இறந்துவிட்டான். அந்த அதிர்ச்சி சோகத்திலேயே குணவதி "ஓ" வென பலத்த அவலக்குரலில் புலம்ப அது சித்தர் திருமூலரின் காதுகளில் பாய்ந்து விட்டது.



தங்களுக்கு இதுவரை சிறப்பான ஆட்சி தந்து தங்களை பாதுகாத்து வந்த மன்னனின் மரணச் செய்தி கேட்டு அந்நாட்டு குடிமக்கள் சோகம் தோய்ந்த முகத்துடன் அரண்மனை வாயிலில் திரண்டுவிட்டனர். வீரசேனனின் நற்பண்புகளையும், அவன் தனது மக்களுக்கு ஆற்றிவந்த சேவைகளையும் நன்கறிந்திருந்த திருமூலர் ஒரு தீர்மானத்திற்கு வந்து, வந்த வழியே திரும்பிப் போய், வழக்கமாக தான் தவஞ்செய்து வரும் குகைக்குள் நுழைந்தார்.

சற்று முன்பு தான் வெளியே சென்ற தனது குருநாதர், இவ்வளவு சீக்கிரம் திரும்பி வந்துவிட்டாரே, இதில் ஏதோ விஷயம் இருக்கக்கூடும் என்ற யூகத்தில் சித்தரின் சீடன் குருராஜன் விரைவில் குருநாதரின் முன்பு கை கட்டி பணிவுடன் நின்றான், அவர் உத்திரவை எதிர்நோக்கி,

"சீடனே! உனக்கு ஒரு செய்தி. இதுவரை தன் நாட்டு மக்களுக்கு பல நற்பணிகளை ஆற்றி வந்த பாண்டிய மன்னன் வீரசேனன் திடீரென மரணமடைந்து விட்டான். அவன் மனைவியும், குடிமக்களும் அரசனை இழந்த துக்கத்தில் இருக்கும் காட்சி என் நெஞ்சை தொட்டு விட்டது. எனவே நான் கூடு விட்டு கூடு பாயும் முறையில் சில வினாடிகளில் வீரசேனனின்

உடலில் புக தீர்மானித்துள்ளேன்.

நீ செய்ய வேண்டியது என்ன தெரியுமா குரு ராஜா! நான் இப்போது துறக்கப் போகும் திரு மூல ஸ்தூல சரீரத்தை இங்கேயே குகையில், நான் மீண்டும் திரும்பி வரும்வரை பத்திரமாக பாதுகாத்து வா! நான் மேற் கொள்ளப்போகும் பணிகள் முடிவடைந்தவுடன், அவ்வுடலில் திரும்பப் புக உள்ளேன். கவனம் என




எச்சரிக்கையுடன் கூறி அக்கணமே, அந்த உடலை நீத்து, சூட்சம வடிவில் ஆகாயத்தில் சஞ்சரிக்கத் தொடங்கினார்.
எதுவும் பதில் கூறாத குருராஜன் இதனைக் கேட்டு திகைத்து, பிறகு தன்னை சுதாரித்துக் கொண்டு தனது குரு நாதனின் பூத உடலை மிக கவனமாக சுமந்து கொண்டுபோய் ஒரு இருட்டுப் பகுதியில் பத்திரமாக கிடத்தி மறைத்து வைத்தான்.

அதே நேரம் மாண்ட மன்னனுக்கு செய்ய வேண்டிய இறுதி கிரியைகளுக்காக அவருடைய பூத உடல் சுத்தமாகிக் கொண்டிருந்த வேளை அது. அவரைச் சுற்றிலும் மனைவி, மக்கள், உறவினர், நண்பர், முக்கிய அரண்மனை பதவியில் இருப்போர்  என பலர் சூழ்ந்திருக்க, அவ்வுடலில் யாரும் காணாத வகையில், திருமூலரின் சூட்சம வடிவம் அவ்வுடலில் பிரவேசித்தது. இதன் விளைவாக தரையில் கிடத்தப்பட்டிருந்த வீரசேனனின் உடலில் முதலில் சற்று அசைவு ஏற்படவே, அங்குள்ளோர் அனைவருமே பீதியிலும், அதிர்ச்சியிலும் உறைந்து போய் விட்டனர்.

சற்று உடலை அசைத்த வீரசேனன், மயக்கத்திலிருந்து எழுந்தது போல் சடாரென எழுந்து உட்கார்ந்து திரு திருவென விழித்து இங்கே என்ன நடக்கிறது? ஏன் என் உடல் ஈரமாக உள்ளது? சுற்றிலும் இத்தனை பேர் நிற்க காரணமென்ன? என படபடவென கேள்விகள் எழுப்பினார்?
சற்றுமுன் அழுகைக் குரல்கள் ஒலித்த இடத்தில இப்போது ஒரே மகிழ்ச்சி ஆரவாரம்
தன் கண்ணீரை துடைத்துக் கொண்டே, பட்டத்து ராணி ஆனந்தமுடன் "நாதரே தாங்கள் சில மணி நேரம் முன்பு, எங்கோ அரண்மனைக்கு வெளியே நகர்வலம் சென்றுவிட்டு திரும்பி வந்து அபாயகர உடல் நிலையுடன் படுக்கையில் சுருண்டு விட்டீர்கள். பேச்சுமூச்சு அற்ற தங்கள் உடலை நன்கு பரிசோதித்த வைத்தியர்கள் உயிர் பிரிந்து விட்டதாக அறிவித்து விடவே, நாங்களும் நாட்டு மக்களும் சோகத்தில் மூழ்கி கிடந்தோம். நல்லவேளை இறையருளால் தாங்கள் பிழைத்து, என் தாலி பாக்கியத்திற்கு உரம் சேர்த்து விட்டீர்கள்" என வேகமாக பதில் சொன்னாள்.

குணவதி பேசி முடித்ததும் அரசரின் முதலமைச்சர் "மன்னரே நேற்று இரவு வெளியே என்ன நடந்தது?

தங்கள் உடம்பு பாதித்து விட எது காரணமானது?" என்று பரிவுடன் கேட்டார். அதற்கு பதிலளிக்கும் விதமாக வீரசேனன் "அனைவரும் கேட்டுக் கொள்ளுங்கள் நான் அரண்மனை வைத்தியர்கள் கூற்றுப்படி இறந்து போனது உண்மையே" நடந்தது இதுவே'.

நான் தனித்து நேற்றிரவு நகர்வலம் சென்றிருந்தேன் அல்லவா? அப்போது ஒரு நாகம் சரசரவென பூமியில் ஊர்ந்து வந்து கொண்டிருந்தது. அது கவனப்பிசகாக முட்கள் கொண்ட ஒரு செடியை கடக்கையில் அதில் உள்ள கூரிய முள் அந்த நாகத்தின் உடலில் குத்திவிடவே, அது சட்டென்று சீற்றமுற்று படம் எடுத்து அச்செடியின் அருகில் உள்ள வேறொரு செடியின் பூ ஒன்றின் மீது தன் விஷத்தை கக்கிவிட்டது. விதி விளையாட, நான் அறியாமல் அப்பூவின் நறுமணத்தால் ஈர்க்கப்பட்டு, அதனை எடுத்து முகர்ந்துவிட்டேன். பிறகு விஷத் தாக்குதல் என் உடலெங்கும் பரவிவிடவே, தக்க குணம் பெற, தள்ளாடி அரண்மனைக்குத் திரும்பி வந்து படுக்கையில் சாய்ந்ததோடு, அதனால் என் உயிரும் பிரிந்திருக்க வாய்ப்புண்டானது. ஆனால் சிவனருளால் இப்போது உயிர்பெற்று விட்டேன் என விரிவாகக் கூறி அனைவரையும் ஆச்சர்யப்பட வைத்தான். அங்குள்ளோர் மன்னனும், அரசியும் தனித்திருக்கும் வகையில், அங்கிருந்து களிப்புடன் விடை பெற்று செல்ல ஆரம்பித்தனர்.

மன்னனின் உடலில் பிரவேசித்திருந்த திருமூலருக்கு இப்படி பரகாய பிரவேசம் செய்வது புதிதான ஒன்றல்ல'. அந்த முன்னணி காட்சி இப்படி மலர்கிறது'..
திருமூலர் கயிலாய பரம்பரையைச் சேர்ந்தவரும், சர்வேஸ்வரனிடமும், நந்தி தேவரிடமும் முறையாக உபதேசம் பெற்ற அளப்பரிய தெய்வாம்சம் கொண்டவர் என பெரியபுராணம் இவரை சிலாகித்துக் கூறுகிறது. அனைத்துச் சக்திகளும் ஒருங்கே வரப்பெற்ற இவர் வானமார்க்கமாகவே பயணித்து திருக்கோயில்கள் சென்று, இறை தரிசனம் பெறுவதில் மிக்க ஈடுபாடு கொண்டவர்.
அப்படி அவர் ஒரு சமயம் புனித தலங்களில் ஒன்றான திருவாடுதுறை ஆலயம் சென்று மனம் மகிழ ஈஸ்வர, ஈஸ்வரி தரிசனங்களை முடித்து பயணமாக வருகையில், வழியில் சாத்தனூர் என்ற சிற்றூருக்கு வந்து சேர்ந்தார். அங்கே அவர் ஒரு காட்சியைக் கண்டு மனம் பதைத்துவிட்டார்.
அங்கே அவ்வூர் வயற்பகுதியில் அப்போது அவ்வூர் மாடுகளை மேய்க்கும் தொழிலைக் கொண்ட மூலனென்பவன் திடீரென மரணமுற, அவனைச் சுற்றி அவனால் மேய்ச்சலுக்கு அழைத்துச் செல்லப்படும் அத்தனை மாடுகளும் அந்த பூத உடலை சுற்றி நின்று கொண்டு கண்களில் நீர் வடிய அந்த அந்திப் பொழுதில் "அம்மா அம்மா" என பெருங் குரலெழுப்பி அழுது கொண்டிருந்தன. அவ்விடத்தை விட்டு நகர இஷ்டமின்றி அவை சிலையாக நின்ற சோகநிலை திருமூலரின் நெஞ்சைத் தொட்டு விட்டது.

அடுத்த கணம் ஒரு தீர்மானத்திற்கு வந்த திருமூலர் அந்த வாயில்லா ஜீவன்களின் மீது பரிதாபப்பட்டு, கூடு விட்டு கூடு பாயும் வித்தையை அவர் அறிந்துள்ளதால் தனது பூத உடலை ஒரு செடி கொடி அடர்ந்த பகுதியில் நீத்துவிட்டு, மாண்டு கிடந்த மூலனின் உடலில் புகுந்து பிரயோகித்துவிட்டார். அதனால் சில வினாடிகளில் தரையில் கிடந்த மூலனின் உடலில் சில அசைவுகள் தோன்றி, சடாரென அவ்வுருவம் எழுந்து உட்காரவே, அந்த கால்நடைகள் ஆனந்தத்தால் வழக்கம் போல் அம்மா என்ற மகிழ்ச்சி ஓலத்தை எழுப்பின.

இதற்குள், மாடு மேய்க்கச் சென்ற தனது புருஷன் வெகு நேரமாகியும் வீடு திரும்பவில்லையே என்ற கவலையில் ஊர்க் கோடியில் உள்ள அந்த வயல்பகுதிக்கு தேடி வந்த இடையன் மனைவி, மூலரைக் கண்டு மகிழ்ச்சியுற்று "என்னங்க! இன்னிக்கு இத்தனை நேரமாச்சு? விசாரம் வந்துட்டதாலே தேடி வந்தேன். வாங்க வீட்டுக்குப் போகலாம்" என அன்புடன் அவரைக் கூப்பிட்டாள்.

ஆனால் மூலரோ, "தாயே! நான் நீங்கள் நினைக்கும் தங்கள் கணவன் இல்லை. ஒரு சிவனடியான். இங்கு நான் வந்த போது உனது துணைவன் விதி முடிவடைந்ததால் மாண்டு போனான். இந்த மாடுகள் படும் வேதனையைக் காண மனமின்றி, அவைகளை தற்காலிகமாக சாந்தமுற வைக்க எனக்குத் தெரிந்த வித்தை மூலம், மூலனின் உடலில் புகுந்துகொண்டு அதனை உயிர்ப்பித்தேன். அம்மா! என்னை என் வழியில் செல்லவிடுங்கள்" என பவ்வியமாகக் கேட்டுக் கொண்டார். மூலனின் மனைவியோ இதனை ஏற்கும் மனநிலையில் அப்போது இல்லை. தன் புருஷனுக்கு ஏதோ பிரமை பிடித்து உள்ளதாகவே அவள் கருதி, திருமூலர் சொன்னவற்றை ஏற்றுக் கொள்ளவில்லை.



மூலனின் மனைவி வலுக்கட்டாயமாக அவரை ஊருக்குள் அழைத்துச் சென்று ஊர்ப் பெரியவர்களைக் கூட்டி, தனது கணவனின் நிலையை எடுத்துச் சொல்லி, அவருக்கு ஏதோ ஆகிவிட்டது எனக் கூறி புலம்பவே, அக்கூட்டத்தின் தலைமையாளர் திருமூலரிடம் விசாரணை மேற்கொண்டார். அவரிடம் நடந்தவற்றை திருமூலர் எடுத்துச் சொன்னதோடு, கூட்டத்தினரை நம்ப வைக்க, மூலனின் உடம்பிலிருந்து விலகி, வேறு வடிவிற்கு சென்று மூலனின் உடலை பூமியில் கிடத்தி அதனை செயலற்றதாகிவிட்டது. கண்முன் நடத்தப்பட்ட அக்காட்சியை ஏற்றுக் கொண்ட ஊர்ப் பெரியவர்கள், திருமூலர் தன் வழியே செல்ல அனுமதித்து, அவரை வணங்கவும் செய்தனர். அத்தோடு மட்டுமல்லாமல், மூலனின் மனைவியை ஒரு வழியாக தேற்றி, அவளை தன் வீட்டிற்குச் செல்ல அனுப்பி வைத்தனர்.

அனைவரும் சென்ற பிறகு, திரு மூலர் தனது பழைய உடலை நீத்து மறைத்த புதர்ப் பகுதிக்குச் சென்றார், பழையபடி அதில் உட்புகும் நோக்கில், ஆனால் தெய்வம் வேறாக நினைத்து விட்டதோ என்னவோ! திருமூலரின் பழைய உடல் எங்கோ மறைந்து விட்டிருந்தது! வேறு வழியின்றி மூலனின் உடலிலேயே இனி இருக்க வேண்டியது தான் என முடிவு செய்த அந்த மகான் திருவாவடுதுறை திருக்கோயிலுக்கு திரும்பி வந்து நீண்ட தவம் மேற்கொண்டார்.
அக்காலத்தில் தான் திருமூலர் பல்வேறு உலக தத்துவங்களை உள்ளடக்கிய 3000 பாடல்கள் அடங்கிய பிரசித்திப்பெற்ற திருமந்திரம் என்ற அரிய நூலை படைத்து உலகிற்கு அளித்தார். இன்றும் அது ஞான முதிர்ச்சி நூல் எனக் கொண்டாடப்படுகிறது.

இந்த நூல் தவிர தன் வாழ்நாள் காலத்தில் திரு மூலர் காவியம் (8000 கிரந்தங்கள்) திரு மூலர் சிற்ப நூல் (1000 கிரந்தம்) திருமூலர் ஜோதிடம் (300 பாடல்கள்) திரு மூலர் மாந்திரீகம் (600 பாடல்கள்) திரு மூலர் சல்லியம் (1000 பாடல்கள்) திரு மூலர் வைத்திய காவியம் (1000 பாடல்கள்) போன்ற பல உயர்ந்த நூலுக்கு திரு மூலர் படைப்பாளி ஆகிறார்.

முதலில் விட்ட சம்பவத்திற்கு மீண்டும் வருவோம்.

மன்னன் வீரசேனனின் உடம்பில் புகுந்து கொண்ட திரு மூலர், அந்த அரசனை விட குடிமக்களுக்கு நல்லாட்சி தந்தார். ஆனால் அவர் துறவி என்பதால் மன்னனின் மனைவியை தாயாகவே நடத்தி, அவளுக்கு குடும்ப இன்பம் தராது தவிர்த்துவிட்டார். இதனால் வேதனையுற்ற குணவதி ஒரு நாள் அவரிடம் துணிந்தே கேட்டுவிட்டாள். "நாதரே என்னுடன் ஈருடல் ஒருயிராக வாழ்ந்து வந்த தாங்கள், திடீரென மயக்கமுற்ற நாளிலிருந்து என்னை மனைவி ஸ்தானத்தில் வைக்காமல், தாய் போன்று நடத்துவதின் நோக்கமென்ன?" என.

இனியும் உண்மையைச் சொல்ல தயங்கக் கூடாது என்று திரு மூலர் அன்று நடந்த உண்மைகளை குணவதிக்கு எடுத்துக் கூறி அவளை தெளிவுபடுத்தினார்.
ஆனாலும், திடீரென தன்னைவிட்டு ஒரு நாள் திரு மூலர் மறைந்து செல்லும் வாய்ப்புண்டு, அதனால் ராணி என்ற அந்தஸ்து பறி போய்விடும் என்ற அச்சத்தில், குணவதி என்ற பெயருக்கு மாறாக செயல்பட்டு அவள் திரு மூலரின் பழைய பூத உடலை படைவீரர்கள் கொண்டு நாடெங்கும் தேடச் செய்து, அது கண்டு பிடிக்கப்பட்டதால் அதனை எரிக்கவும் ஏற்பாடு செய்துவிட்டாள். இது சுயநல எண்ணத்தில் செய்யப்பட்டதால் மகான் திரு மூலர் அதனை மன்னித்து விட்டார்.
இதற்குப் பிறகு திரு மூலர் தனக்கு கிடைத்த ஒரு அரிய சந்தர்ப்பத்தை பயன்படுத்திக் கொண்டு, ஒரு நாள் இரவு அரண்மனையை விட்டு யாரும் அறியாமல் நீங்கி, எப்போதும் சித்தர்கள் புழங்கிக் கொண்டே இருக்கும் சதுரகிரி மலைக்கு வந்து, அங்கு தற்செயலாகக் கிடைத்த ஜம்புகேசுவரன் என்ற பெயர் கொண்டிருந்தவரின் இறந்த உடலில் மூன்றாம் முறையாக கூடுவிட்டு கூடு பாய்ந்து அதில் பிரவேசித்து விட்டார்.

அதற்குப் பிறகு, பொதுமக்களுக்கு அடிக்கடி தத்துவ பிரசங்கங்கள் அளித்து, 12 மடங்களை நிறுவி, அவர்களை நல்வழிப்படுத்தி 3000 ஆண்டுகள் ஆன்மீகச் சேவைகளை ஆற்றிய திரு மூலரை உலகம் என்றும் மறக்காதப்படி, அவரது எண்ணற்ற நூல்கள் இன்றும் சிறந்து விளங்குகின்றன.

"உள்ளம் பெருங்கோயில் ஊன் உடம்பு ஆலயம்
வள்ளல் பிரானார்க்கு வாய் கோபுரவாசல்
தெள்ளத் தெளிந்தோர்க்குச் சீவன் சிவலிங்கம்
கள்ளப்புலன் ஐந்தும் காளா மணிவிளக்கே.
-திருமந்திரப்பாடல்

~ ஆரூர். ஆர். சுப்பிரமணியன்
துணை கலெக்டர் (ஓய்வு)

# மூலிகை ரகசியம்

## வில்வம்

மூலிகை ரகசியம் என்கிற இந்த பகுதியில் நமது சத்வித்யா வாசகர்களுக்கு இந்த இதழில் ஓர் அபூர்வ மூலிகையை அறிமுகம் செய்கிறோம். மூலிகை இது தான் என்று குறிப்பிட்ட உடனே, இதுவா? மூலிகையா?

இதில் மருத்துவ குணங்கள் அடங்கி இருக்கிறதா? இதுவரை இது ஒரு மூலிகை என்று தெரியாமலேயே இருந்து விட்டோமே என நிறைய வாசகர்கள் ஆச்சர்யத்தில் மூழ்கவும் வாய்ப்பு உண்டு!

நாம் குறிப்பிடும் மூலிகை வில்வம்! என்ன? வில்வம் ஒரு மூலிகையா? என பலர் கேட்பது காதில் விழுகிறது.

சிவபெருமானுக்கு உகந்தது, பூஜைக்கு சிறந்தது! பௌர்ணமி தினத்தில் அரிய ஆன்மீக சக்தியை வெளிப்படுத்தும் தெய்வீகத் தன்மை வாய்ந்த வில்வமானது, அந்த சிவபெருமானின் பேரருளினால் நோய் தீர்க்கும் மூலிகையாகவும் சித்த, ஆயுர்வேத மருத்துவத்தில் பெரும் பங்காற்றி வருகிறது!

மர வகையை சார்ந்த வில்வத்தில் இதழ்களின் எண்ணிக்கையை வைத்து வில்வம், மகா வில்வம் என வகைப் பிரித்து அறியப்படுகிறது.



மூன்று இலை, ஐந்து இலை, பத்து இலை, பன்னிரண்டு இலை, என வளரக் கூடியது பத்துக்கு மேற்பட்ட இலைத் தொகுப்பு கொண்டதே மகா வில்வம் ஆகும்.

வில்வத்தின் இலை, காய், பூ, பழம் என அனைத்தும் என்னென்ன நோய்களுக்கு மருந்தாகிறது என்பதனை பார்ப்போம்.

உடலில் ஏற்படும் மந்தத் தன்மை, கண் வலி, கண் சிவந்திருத்தல், முகத்தில் கரும்புள்ளிகள், தீராத தலைவலி, காதுவலி, காச நோய், வைரஸ் தொற்றுகள், மலச்சிக்கல், ரத்தசோகை போன்ற பல பிரச்சனைகளை தீர்க்கின்ற மருத்துவ குணம் வில்வத்தில் அடங்கியுள்ளது.

இதன் இலைகளை வதக்கி இளஞ்சூட்டில் கண்ணைச்சுற்றி ஒத்தடம் கொடுக்க கண் பிரச்சனைகள் நீங்கும்.

இலைகளை கசக்கி சாறெடுத்து காதில் விட காது வலி சரியாகும்.

இலைகளை தண்ணீரில் கொதிக்க வைத்து அந்த தண்ணீரைக் குடிக்க காச நோய், வைரஸ் தொற்று குணமாகும்.

வில்வ பழத்தின் சதைப் பகுதியை பாலில் கலந்து முகத்தில் பூச, கரும்புள்ளிகள் மறையும்.

வில்வவேரை அரைத்து தலையில் பற்று போட, தீராத தலைவலி குணமாகும்.
காயை அரைத்து பாலில் கலந்து தலையில் தேய்த்து அரைமணி நேரம் கழித்து குளிக்க, முடி உதிர்தல் நீங்கும்.

இப்படி எண்ணற்ற பயன்களைத் தரும் வில்வம் என்ற மூலிகையை பூஜைக்கும் மருத்துவத்திற்கும் பயன்படுத்தி பலன் பெறுங்கள்.

~ ரா. பன்னீர்செல்வம்

## அரிய ஆன்மிக தகவல்

# மூன்று நிலைகளிலும் பெருமாளை தரிசிக்க அமைக்கப்பட்டுள்ள ஒரே ஆலயம்



சென்னைக்கு அருகில் உள்ளது உத்திரமேரூர்! இங்குள்ள பெருமாள் கோயில் வித்தியாசமான அமைப்பினைக் கொண்டது.
திருமாலின் நின்ற கோலம், இருந்த கோலம், கிடந்த கோலம் ஆகியவற்றை தனித்தனியாக வெவ்வேறு தலங்களில் தான் தரிசிக்க முடியும் ஆனால், இவ்வாலயத்தில் நின்றான், இருந்தான், கிடந்தான் என்கிற மூன்று நிலைகளிலும் தரிசனம் செய்யலாம்.
ஆலய அமைப்பும் ஒரு மாடி வீட்டில் இருப்பதைப் போன்று மூன்று தலங்களாக அமைக்கப்பட்டுள்ளது. அபூர்வ அமைப்பாய் விளங்குகிறது.
கீழ்த் தளத்தில் அமர்ந்த நிலையில் உள்ள இருந்த கோலம்! அடுத்த தளத்தில் நின்ற நிலையில் உள்ள நின்ற கோலம்! அதற்கடுத்த மேல் தளத்தில் கிடந்தான் என்கிற சயன கோலம்!
இப்படி மூன்று நிலைகளிலும் பெருமாளை தரிசிக்க ஏதுவாக அமைக்கப்பட்டுள்ள ஒரே ஆலயம், வரலாற்று சிறப்பினைப் பெற்றுள்ள மாலவனின் உத்திரமேரூர் ஆலயமாகும்!

# அருள்மிகு நீலாயதாட்சி அம்மன் உடனுறை காயா ரோகணசுவாமி ஆலயம்!

பொதுவாக, எந்த ஆலயமாக இருந்தாலும் அந்த ஆலயம் உள்ள பகுதியில் யாராவது மரணமுற்றால் அன்று ஆலயத்தின் நடையை சாத்தி விடுவார்கள். அந்த பிரேதம் எடுக்கப்பட்டவுடன் ஆலயத்தை நீரால் தூய்மை செய்து அதன்பின் சில சடங்குகளை செய்து நடை திறக்கப்பட்டு பூஜைகள் நடைபெறுவது வழக்கம்!

ஆனால், இந்த விதிகளுக்குள் அடங்காத ஆலயம் ஒன்று இருக்கிறது அது, நாகப்பட்டினம் நகரில் அமைந்துள்ள அருள்மிகு நீலாயதாட்சி அம்மன் உடனுறை காயா ரோகணசுவாமி ஆலயம் புராதனப் பெருமை கொண்ட இவ்வாலயத்தில் ஓர் அபூர்வ வழக்கம் உள்ளது இந்த நகரில் உள்ள மீனவக் குடும்பங்களில் யார் இறந்தாலும் இந்த ஆலயத்தின் நடை சாத்தப்படாது மாறாக, திறந்து வைத்து காத்திருப்பார்கள்.



அந்த சடலத்தை இடு காட்டிற்குக் கொண்டு செல்லும் முன் நேராக ஆலய வாசலுக்குக் கொண்டு வந்து வைப்பார்கள். ஆலயத்தில் இறைவனுக்கு சாற்றிய மலர் மாலை மற்றும் வஸ்திரம் ஆகியவற்றை சடலத்திற்கு அணிவித்து, அந்த சடலமானது நேராக இறைவனின் அருட்கடாட்சத்தோடு விண்ணுலகு செல்லும் வகையில் சடங்குகள் நடக்கிறது.

இப்படி நடப்பதற்குக் காரணம் என்ன? அதற்கு இந்த தலத்தில், மீனவ குலத்தில் பிறந்து நாயன்மாராய் உயர்ந்த அதிபத்த நாயன்மாரே காரணமாவார்.

ஏழ்மை நிலையில் இருந்தும் தான் தினமும் பிடிக்கின்ற முதல் மீனை இறைவனுக்கு அர்ப்பணம் செய்து அதன்பின் கிடைக்கும் மீன்களை விற்று பிழைப்பு நடத்தி வந்தார், அதிபத்தர்!

அவரது பக்தியை சோதிக்க எண்ணிய சிவன், ஒரு நாள் ஒரே ஒரு மீன் மட்டும் அவரது வலையில் கிடைக்குமாறு செய்தார் பிழைப்புக்கு வேறு வழியே இல்லாத நிலையிலும் அந்த ஒரு மீனையும் இறைவனுக்கு அர்ப்பணமாக கடலில் விட்டு விட்டு குடும்பத்தோடு வறுமையை அனுபவித்தார்!

அவரது பக்தியை மெச்சிய இறைவன், பெரும்பரிசு ஒன்றை அவருக்கு அளிக்கும் விதமாக ஒரு நாள் பெரிய தங்க மீன் ஒன்றை மட்டும் அவரது வலையில் சிக்கச் செய்தார் வேறு மீன்கள் வலையில் மாட்டாத நிலையில், தனக்குக் கிடைத்த முதல் மீனான அந்த தங்க மீனையும் கடலிலேயே விட்டு விட்டார்.

அவரது இறைபக்தியை மெச்சிய சிவபெருமான், உமையவளோடு ரிஷப வாகனத்தில் காட்சி கொடுத்து அதிபத்தரை ஆட் கொண்டார்.

அந்த அதிபத்த நாயனாரின் வேண்டுதலின்படி இன்று வரை மீனவ குலத்தில் பிறந்தோர் இறந்தால் இங்கு இந்த மரியாதை செய்யப்படுகிறது.

~ ரா. பன்னீர்செல்வம்

# மே 16 – 31 ராசி பலன்

~ ஆஸ்ட்ரோவேட் ஜோதிடர் மு. செந்தில் நாதன்



## மேஷம்

- திருமணமான தம்பதியர் மனமொத்து வாழ்வார்கள். இருவருக்கும் இடையே அன்னியோன்யம் கூடும்.
- தொழிலில் நீங்கள் சாதகமான விஷயங்களை எதிர்பார்க்கலாம். கூட்டுத்தொழிலில் நல்ல லாபம் கிடைக்கும்.
- தங்களின் உத்தியோகத்தில் சாதனைகளைப் புரிவதற்கு வாய்ப்பு உள்ளது. பணியிடத்தில் நீங்கள் நல்ல பெயர் பெறுவீர்கள். பணியிடச் சூழல் உங்களுக்கு அனுகூலமாக இருக்கும்
- புதிய நண்பர்கள் கிடைப்பார்கள். புதிய நண்பர்கள் மூலம் உங்களுக்கு தன உதவி கிடைக்கும். தங்களின் பொருளாதார நிலையும் சிறப்பாக இருக்கும்.
- உங்கள் பொருளாதார நிலை ஏற்றம் காணும் வகையில் கிரக நிலைகள் உள்ளன.
- பங்கு வத்தக நிறுவனங்களில் முதலீடு செய்வதர்க்கும் லாபங்களை ஈட்டுவதற்கும் இந்த மாதம் ஏற்றதாக உள்ளது.
- மாணவர்களின் கிரகிக்கும் திறன் கூடும். கல்வியில் சிறந்து விளங்குவார்கள்.
- உங்கள் ஆரோக்கியம் சிறப்பாக இருக்கும்.



# ரிஷபம்

- உங்கள் குடும்ப உறவுகளிடம் கருத்து வேறுபாடு ஏற்பட வாய்ப்பு உள்ளது. வாக்கு வாதத்தை தவிர்ப்பது நன்மை பயக்கும்.
- வீட்டில் மூத்தவர்களின் ஆலோசனை கேட்டு அதன்படி நடந்து கொள்ளுவது நன்மை பயக்கும்.
- திருமணத்திற்குக் காத்திருப்பவர்களுக்கு இந்த மாதம் மனதிற்கு பிடித்த வரன் அமையும்.
- திருமணமான தம்பதிகளுக்கு இந்த மாதம் அனுகூலமான மாதமாக இருக்கும். நீங்கள் இருவரும் கருத்தொருமித்து வாழ்வீர்கள்.
- உத்தியோகத்தில் குறிப்பிடத்தக்க முன்னேற்றம் இருக்கும்.
- இந்தமாதம் தங்களின் பொருளாதார நிலையில் சற்று இறக்கம் காணப்படும்.
- இந்த மாதம் நீங்கள் பணப்பற்றாக்குறையை சந்திப்பீர்கள். செலவுகள் அதிகமாக இருக்கும்.
- மாணவர்கள் விடா முயற்சியினால் படிப்பில் வெற்றிக்கொடி கட்டமுடியும்.
- உங்கள் ஆரோக்கியத்தில் நீங்கள் கவனம் செலுத்த வேண்டும். மனம் சோர்வுடன் காணப்படும். உடற்பயிற்சி மற்றும் தியானம் மூலம் உடல் நலம் மற்றும் மனநலம் புத்துணச்சி அடையும்.



AMRTA KARUNA SYRUP
Control Infection Caused due to Bacteria or Virus
Call: 88702 88701
CLINICALLY PROVEN



# மிதுனம்

- திருமணமான தம்பதிகளுக்கிடையே நெருக்கம் அதிகரிக்கும். அன்யோன்யம் கூடும்.
- நீங்கள் அனுசரித்துச் செல்வதன் மூலம் குடும்ப உறவுகள் சீராகவும் அமைதியாகவும் இருக்கும்.
- இந்த மாதம் உத்தியோகத்தை பொறுத்தவரை மந்த நிலை காணப்படும். உரித்த நேரத்தில் பணிகளை முடிக்க முடியாமல் போகலாம். கடினமாக உழைத்தாலும் அதற்குரிய பலன் கிடைப்பது அரிதாக இருக்கும்.
- பொருளாதாரத்தைப் பொறுத்தவரை இந்த மாதம் உங்களுக்கு சற்றே அனுகூலமான நிலை இருக்கும்.
- பணப் புழக்கம் மந்தமாக இருக்கும். உங்கள் செலவுகளை குறைத்துக் கொள்ள வேண்டும்.
- சுயதொழில் செய்பவர்கள் சிறந்த தொழில் வாய்ப்புகளைப் பெறுவார்கள். வியாபாரத்தில் வெற்றி கிடைக்கும்.
- மாணவர்கள் படிப்பில் கவனமுடன் செயல்பட்டு படிப்பில் வெற்றி அடைவார்கள்.
- வேலை பளு காரணமாக உடல் சோர்வு மற்றும் மன அழுத்தம் காணப்படும். தியானம் மற்றும் நடைபயிற்சி மூலம் புத்துணர்ச்சி பெறலாம்.



# கடகம்

- உறவினர்கள், நண்பர்கள் என அனைவரிடமும் நல்ல உறவு நிலை இருக்கும். இது தங்களின் மன மகிழ்ச்சியை கூட்டும்.
- திருமணமான தம்பதிகளின் தாம்பத்திய வாழ்வு சிறக்கும். கணவன் மனைவி இடையே கருத்து வேறுபாடுகள் நீங்கி ஒற்றுமை நிலவும். அன்னியோன்யம் பெருகும்.
- குடும்ப உறவினர்களுக்கு இடையே சுமுகமான உறவு நீடிக்கும்.
- நீங்கள் தொழில் செய்பவராக இருந்தால் சுறுசுறுப்பாக செயல்பட்டு இலக்கை அடைவீர்கள்.
- கூட்டுத்தொழில் செய்பவர்களின் வருமானம் அதிகரிக்கும்.
- தொழில் குறித்த முக்கிய முடிவுகளை எடுக்கும் முன்பு அதன் நன்மை தீமைகளை ஆராய்ந்து முடிவு எடுங்கள்.
- இந்த மாதம் உங்கள் பணப்புழக்கம் அதிகரிக்கும். செலவுகள் கட்டுக்குள் இருக்கும்.
- தன நிலையில் ஏற்றம் ஏற்படும். உங்கள் அன்றாடத் தேவைகளை நீங்கள் எளிதாக சமாளிப்பீர்கள். பணத்தை எதிர்கால நலன் கருதி சேமிப்பீர்கள்.
- மாணவர்கள் கவனச் சிதறலுக்கு ஆட்படுவார்கள். படிப்பில் கவனம் தேவை.
- உங்கள் ஆரோக்கியத்தில் நீங்கள் கவனம் செலுத்த வேண்டும். சிறுநீரகம் சம்மந்தப்பட்ட உடல் நல பாதிப்பு ஏற்படலாம். போதுமான நீர் உட்கொண்டு இந்த பாதிப்பில் இருந்து தப்பிக்கலாம்.



# சிம்மம்

- திருமணமான தம்பதிகளுக்கு இடையே ஒற்றுமை கூடும்.
- குடும்பத்தில் அமைதியும் நல்லிணக்கமும் இருக்கும்.
- திருமண முயற்சிகளில் தாமதம் ஏற்படலாம்.
- பொருளாதார நிலையைப் பொறுத்தவரை இந்த மாதம் உங்களுக்கு சில அனுகூலங்கள் இருக்கும்.
- அரசு பணியில் இருப்பவர்களுக்கு இந்த மாதம் சிறப்பாக இருக்கும். தன்னுடன் பணிபுரிபவர்களிடம் சுமூகமான உறவு ஏற்படும்.
- உத்தியோகத்தில் உள்ளவர்களின் திறமை மேலதிகாரிகளால் பாராட்டப்படும். உங்களுக்கு பதவி உயர்வு கிடைப்பதற்கான வாய்ப்பு உள்ளது.
- சுயதொழில் செய்பவர்கள் தங்கள் வருமானத்தை உயர்த்திக் கொள்ள புதிய தொழிலைத் தொடங்குவார்கள்.
- நீங்கள் ஆன்மீக விஷயங்களுக்காகவும் பணத்தை செலவு செய்வீர்கள்.
- பள்ளிக்கல்வி பயிலும் மாணவர்கள் கவனச் சிதறல் போன்ற தடைகளையும் தாண்டி கல்வியில் முன்னேறுவார்கள். பல புதிய விஷயங்களை கற்றுக் கொள்வார்கள்.
- தங்களின் ஆரோக்கியம் சிறப்பாக இருக்கும்.
- வயதானவர்களின் உடல் நிலையில் சிறிது கவனமாக தேவை.



# கன்னி

- குடும்பத்தில் உள்ளவர்களிடம் உங்களின் மதிப்பும் மரியாதையும் கூடும்.
- வாழ்க்கைத் துணை மற்றும் அவர்கள் வீட்டாரிடம் கருத்து வேறுபாடு ஏற்படும். வாக்குவாத்தை தவிர்பது நன்மை பயக்கும்.
- உறவினர்களிடம் பூர்வீக சொத்து சம்பந்தமான கருத்து வேறுபாடு  ஏற்படும். உறவில் நல்லிணக்கம் காண நீங்கள் கடின முயற்சிகளை மேற்கொள்ள வேண்டியிருக்கும். எனவே நீங்கள் கவனமாக இருக்க வேண்டும். விட்டுக் கொடுத்து செல்வதன் மூலம் நீங்கள் உறவில் அமைதியை தக்க வைத்துக் கொள்ள இயலும்.
- உத்தியோகத்தில் இருக்கும் அன்பர்கள் சுமாரான பலன்களை எதிர்பார்க்கலாம். தங்களின் கடின உழைப்பிற்கு அங்கீகாரம் கிடைக்காமல் போகலாம். சக பணியாளர்களுடன் கருத்து வேறுபாடு ஏற்பட வாய்ப்புள்ளது. வீண் வக்குவாத்தை தவிர்பது நன்மை பயக்கும்.
- கூட்டுத் தொழில் உங்களுக்கு லாபத்தை அளிக்கும்.
- உங்களுக்கு சுய தொழிலில் தன  ரீதியான நல்ல முன்னேற்றம ஏற்படும்.
- தொழில் ஒப்பந்தம் சார்ந்த ஆவணங்களில் கையொப்பமிடுமுன் கவனம் தேவை.
- வெளிநாட்டு தொழில் வாய்ப்புகள் உங்களை நாடி வரும். அதன் மூலம் நீங்கள் ஆதாயமும் வெற்றியும் பெறுவீர்கள்.



# துலாம்

- திருமணமான தம்பதிகள் தங்கள் வாழ்க்கைத் துணைக்கென நேரம் ஒதுக்கி மகிழ்ச்சியாக இருப்பார்கள்.
- உறவினர்களிடம் சில கருத்து வேறுபாடுகள் ஏற்படும். வாக்கில் கவனம் தேவை.
- உத்தியோகத்தில் இருப்பவர்கள் அங்கீகாரம் பெற சிறிது கடினமாக உழைக்க வேண்டியிருக்கும்.
- சுய தொழில் மிற்றும் வியாபாரம் செய்பவர்கள் பெரிய அளவில் லாபம் எதுவும் எதிர்பார்க்க முடியாது.
- கூட்டுத்தொழில் செய்பவர்கள் அதிக லாபத்தை சம்பாதிக்க முடியும்.
- எழுத்துத் துறை, நடிப்புத் துறை மற்றும் கலைத் துறையில் இருப்பவர்கள் சிறந்த வகையில் வருமானம் ஈட்டுவார்கள்.
- ஏற்றுமதி மற்றும் இறக்குமதி தொழிலில் ஈடுபட்டிருப்பவர்கள் கணிசமான லாபம் காண்பார்கள்.
- உங்கள் பொருளாதார நிலை சுமாராக இருக்கும்.
- மாணவர்கள் படிப்பில் விடா முயற்சிகளை மேற்கொள்ள வேண்டும்.
- உடல் ஆரோக்கியம் சிறிது பாதிக்கப்படலாம். உடல் நலனில் அக்கறை தேவை. மருத்துவ செலவுகள் எழும் என்பதால் அதற்கு சிறிது பணத்தை ஒதுக்கி வைத்துக் கொள்ள வேண்டும்.



# விருச்சிகம்

- உங்கள் வாழ்க்கைத் துணையுடனான புரிதல் நன்றாக இருக்கும். வாழ்க்கை துணையுடன் அன்யோன்யம் கூடும்.
- திருமணம் தடை தாமத பட்டவர்களுக்கு திருமண முயற்சிகள் கை கூடும்.
- உத்தியோகத்தில் நன்மதிப்பும் பாராட்டும் கிடைக்கும். பதவி உயர்வு ஏற்பட வாய்ப்பு உள்ளது.
- தொழில் மற்றும் வியாபாரம் செய்பவர்களுக்கு இது சிறந்த மாதமாக இருக்கும். தொழிலில் லாபம் அதிகரிக்கும்.
- கூட்டுத் தொழிலில் அதிக லாபங்களை எதிர்பார்க்க முடியாது.
- உங்கள் கடந்த கால முதலீடுகளின் மூலம் நீங்கள் லாபம் பெறுவீர்கள். உங்கள் பணப்புழக்கம் கணிசமாக அதிகரிக்கும்.
- யூக வணிகங்களான பங்கு மற்றும் பொருள் வர்த்தகத்தில் அதிக லாபங்களை எதிர்பார்க்கலாம்.
- இந்த மாதம் புதிய முதலீடுகள் எதுவும் மேற்கொள்ளாதீர்கள்.
- மாணவர்கள் படிப்பில் கவனம் செலுத்த வேண்டும்.
- வயிறு சம்பந்தமான உபாதைகள் வருவதற்கு வாய்ப்பு உள்ளது என்பதால் உங்கள் உணவில் கவனம் செலுத்த வேண்டும்.



# தனுசு

- திருமண உறவில் சிறிய விஷயங்களுக்கெல்லாம் கருத்து வேறுபாடுகள் ஏற்படும். எனவே வாழ்க்கைத் துணையிடத்தில் வாக்குவாதங்களை மேற்கொள்ளாமலிருப்பது நன்மை பயக்கும்.
- குடும்பத்தில் உள்ளவர்களிடம் நல்லுறவு நீடிக்கும்.
- தங்களின் பொருளாதாரம், வேலை, போன்றவற்றில் ஏற்றம் பெற உகந்த மாதமாகும்.
- வேலை தேடிக்கொண்டிருப்பவர்களுக்கு புதிய வேலைவாய்ப்புகள் கிடைக்கும்.
- தொழிலில் போட்டிகளை சந்திப்பீர்கள். முதலீடுகளை மேற்கொள்ளும் போது கவனம் தேவை.
- எதிர் கால நலன் கருதி உங்கள் செலவுகளை குறைத்துக் கொண்டு சேமிப்பை அதிகரித்துக் கொள்ளுவது நன்மை பயக்கும்.
- உங்கள் ஆரோக்கியம் சிறப்பாக இருக்கும் என்றாலும் உணவு கட்டுப்பாடு விசயத்தில் கவனம் செலுத்த வேண்டும்.
- மாணவர்கள் கடுமையாக உழைத்துப் படிக்க வேண்டும்.




உங்கள் இல்லத்தில் வைதீக/ஆகம முறைப்படி யாகங்கள் மற்றும் சத்ய நாராயண பூஜை போன்ற அனைத்து பூஜைகளும் செய்து தர அணுகவும்

www.priestservices.com

போன்: 88702 88701



# மகரம்

- கணவன் மனைவி உறவு சிறப்பாக இருக்கும்.
- குடும்பத்தில் சில சிறு சிறு பிரச்சினைகள் வருவதற்கு வாய்ப்புகள் உள்ளன. வாக்கில் கவனம் தேவை.
- உத்தியோகத்தில் உள்ளவர்கள் அதிக பணிச் சுமை இருந்த போதிலும் சிறப்பாக பணியாற்றுவார்கள்.
- புதிய பணிகள் மற்றும் பொறுப்புக்கள் உங்களுக்கு வழங்கப்படும். உங்கள் செயல் திறன் பிறரால் பாராட்டப்படும்.
- சுயதொழில் செய்பவர்கள் பெரிய அளவிலான வாடிக்கையாளர்களைப் பெறுவார்கள்.
- தங்களின் பொருளாதாரம் உயரும் அதே சமயம் வீட்டுத் தேவைக்கான செலவுகளும் அதிகரிக்கும்.
- பள்ளிக்கல்வி மாணவர்கள் படிப்பில் வெற்றி காண்பர்.
- உயர்கல்வி பயிலும் மாணவர்கள் பொறுமையுடன் கடினமாக உழைத்துப் படித்தால் வெற்றி நிச்சயம்.
- உங்கள் ஆரோக்கியம் சிறப்பாக இருக்கும். அதனை தக்க வைத்துக்கொள்ள நீங்கள் உடற்பயிற்சி, நடைபயிற்சி போன்றவற்றை மேற்கொள்வது நலம் பயக்கும்.



# கும்பம்

- திருமணமான தம்பதிகளுக்கிடையே இணக்கம் கூடும்.
- குடும்ப உறவு மகிழ்ச்சி அளிக்ககூடிய வகையில் இருக்கும்.
- இந்த மாதம் உங்கள்  நண்பர்களுடன்  நீங்கள் மகிழ்ச்சியாக இருக்கும் மாதமாக இருக்கும்.
- பணியிடத்தில் போட்டிகள் இருக்கும் என்றாலும் அவற்றை நீங்கள் வெல்வீர்கள். உங்கள் செயல் திறன் உங்கள் மேலதிகாரிகளின் கவனத்தை ஈர்க்கும்.
- இந்த மாதம் கூட்டுத் தொழில் சிறப்பாக இருக்கும். குறிப்பாக வெளிநாடு சம்பந்தப்பட்ட தொழில் புரிபவர்களுக்கு இது சிறந்த பலன்களை அளிக்கும் மாதம் ஆகும்.
- நிதிநிலையைப் பொறுத்தவரை இந்த மாதம் உங்களுக்கு அதிர்ஷ்டகரமான மாதமாக இருக்கும்.
- இந்த மாதம் உங்கள் நிதிநிலையில் ஏற்ற இறக்கம் காணப்படும். உங்கள் மனைவி மற்றும் அவர் வழி உறவினர்களுக்காக  செலவுகள் ஏற்படும்.
- தங்களின் செலவுகளை கட்டுப்படுத்தி சேமிப்பை அதிகரிக்க முயற்சிகளை மேற்கொள்ள வேண்டும்.
- மாணவர்கள் படிப்பில் வெற்றி காண்பார்கள்.



# மீனம்

- குடும்பத்தில் அன்பும் மகிழ்ச்சியும் மேலோங்கும். குடும்பத்தார் அனைவரிடமும் சுமுகமான உறவு காணப்படும்.
- திருமணத்திற்குக் காத்திருப்பவர்களுக்கு இந்த மாதம் தக்க துணை தேட உகந்த மாதம் ஆகும்.
- திருமணமான தம்பதிகள் இடையே ஒற்றுமை இருக்கும்.
- உத்தியோகத்தில் உள்ளவர்கள் மேலதிகாரிகளின் கவனத்தை ஈர்க்கும் வகையில் சிறப்பாக பணியாற்றுவார்கள்.
- சுயதொழில் மற்றும் வியாபாரம் ஸ்திரமான நிலையில் இருக்கும்.
- கூட்டுத்தொழில் செய்பவர்கள் தங்கள் இலக்குகளை அடைய அதிக முயற்சிகளை மேற்கொள்ள வேண்டும்.
- இந்த மாத இறுதியில்  உங்கள் வருமானம் உயரும். பொருளாதார நிலை மேம்படும்.
- மாணவர்கள் மனதில் பதட்ட நிலை இருக்கும். மாணவர்கள் அதிக முயற்சியுடனும் கவனமுடனும் படிக்க வேண்டும். ஞாபகத் திறனை வளர்த்துக் கொள்ள வேண்டும்.
- ஆரோக்கியத்தில் பெரிய அளவிலான பாதிப்புகள் ஏதும் இருக்க வாய்ப்பில்லை என்றாலும் சிறு சிறு உபாதைகள் வந்து போகும்.  அஜீரணக் கோளாறுகள் ஏற்படுவதற்கான வாய்ப்பு உள்ளது எனவே உங்கள் ஆரோக்கியத்தில் கவனம் செலுத்த வேண்டியிருக்கும்.

அனைத்து ஜோதிட, புரோஹித மற்றும் ஆன்மிக சேவைகளுக்கு
தொடர்புகொள்ள: **88702 88701**